# தமிழ் வளர்ச்சிக் கழகம்
# செய்தி மின்மடல்

தனிச் சுற்றுக்கு மட்டும் 1:3 ஆகஸ்டு 2025


## உங்களுடன்

வணக்கம்.

தமது பணி நெருக்கடிகளைக் கடந்து
நேரம் கிடைக்கும் போதெல்லாம்
தமிழ் வளர்ச்சிக்கழகப் பணிகள் பற்றி
அறக்கட்டளைத் தலைவர்
மேனாள் ஒன்றிய நிதியமைச்சர்
மாண்புமிகு திரு
ப.சிதம்பரம் அவர்கள்
கேட்டு அறிவதில்
ஊக்கம் கிடைக்கிறது!
அறக்கட்டளை,
ஆட்சிக்குழு,
பொதுக்குழு தரும்
ஆதரவும்
ஒத்துழைப்பும்
நம்பிக்கை தருகின்றன.



சொல் புதிது
தமிழ் ஆர்வலர்களிடமும்
அச்சு ஊடகங்களிலும்
சமூக ஊடகங்களிலும்
பேசு பொருள் ஆகியுள்ளது
மகிழ்ச்சி தருகிறது.

ஒவ்வொரு புதன் கிழமையும்
தமிழ் வளர்ச்சிக்கழகத்
திட்டப் பணிகள் ஒன்றின்
முன்னேற்றம் குறித்துத்
துணைத்தலைவர்கள்
பேராசிரியர் வ.ஜெயதேவன்
பேராசிரியர் நல்லூர் சரவணன் மற்றும்
செயலாளர்-பதிப்பாசிரியர்
அர்த்தநாரீசுவரன் ஆகியோருடன்
ஆய்வு செய்வதிலும்
திட்டப் பணியாளர்களுடன்
கலந்துரையாடுவதிலும்
பணி முன்னேற்றம் அறிவதோடு
எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகளும்
களையப்பட்டு வருகின்றன.

அவ்வகையில் 6/8/25 அன்று
“தமிழ்ச் சிந்தனைக் களஞ்சியம்
(சங்க இலக்கியம்)”
திட்டப்பணி ஆய்வு நடந்தது.
பேராசிரியர் வாணி அறிவாளனிடம்
பணி முன்னேற்றம் குறித்துக்
கேட்டறியப்பட்டது.
இதுவரை முடித்துள்ள
தொகுப்புப் பணிகள் குறித்தும்
இனி மேற்கொள்ள வேண்டியிருக்கும்
தலைப்பு மற்றும்
பொருள்தரும் பணிகள் குறித்தும்
எதிர்கொண்ட /எதிர்கொள்ளும்
சிக்கல்கள் குறித்த கலந்துரையாடலில்
தெளிவுகளை நோக்கிய
தீர்வுகள் தென்பட்டன.

13/8/25 அன்று
மாணவர் அகராதித் திட்ட ஆய்வு..
பாடநூல் நிறுவனத்திடமிருந்து
முதல் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை
தமிழ்மொழி மற்றும்
தமிழ்வழிப் பாட நூல்கள்
வன்தட்டில் பதிவாக்கி
வாங்கி வரப்பெற்றுள்ளன.
அகராதிக்குத் தேவைப்படுமாறு
தகவல்களைத் தரவுகளாக்கும் முயற்சியில்
எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்து
முனைவர் ஜேம்ஸ்
எடுத்துரைத்தார்.
சிக்கல்களைக் களைவதற்கான
வழிகள் கண்டறியப்பட்டு
மாணவர் அகராதிப் பணி
விரைவுபடுத்தப்பட்டுள்ளது.
இடையில்
தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் மீது
இணைய உலக நம்பிக்கையை
வெளிப்படுத்துகிற வகையில்
நீச்சல்காரன்
கொண்டுவந்திருக்கும்
விக்கி மூலத்துடன்
இணைந்த
இணையத் தமிழ்
வளர்ச்சிக்கான
மாணவர் பயிற்சித் திட்டம்
ஆய்வில் உள்ளது!
தொடர்வோம் ….
நன்றி!

- ம.ரா.



# தமிழ் இலக்கிய, இலக்கணக் கலைச்சொல் களஞ்சியம்

*ஆங்கில மொழியில் இலக்கியவியல் கலைச்சொல் அகராதிகள், கலைச்சொற்களஞ்சியங்கள் தொடர்ந்து வெளிவந்த வண்ணம் உள்ளன. அவை இற்றைப்படுத்தமும் செய்யப்படுகின்றன. சான்றுகள்:*

Abrams, M.H. , 1985. A Glossary of literary Terms, Macmillan India Ltd.

Murfinn, Ross and Supriya M.Ray. , 1997. The Bedford Glossary of Critical and Literary Terms, Macmillan Press Ltd.

Cudden, J. A. , 1998. A Dictionary of Literary Terms and Literary Theories, Blackwell

Peter Childs, Roger Fowler, The Routledge Dictionary of Literary Terms, 2006, 3rd Edition

Clare Cavanagh, Jahan Ramazani, Paul Rouzer((Edrs), 2012, 4th Edition, The Princeton Encyclopedia of Poetry and Poetics, Princeton University.



*தமிழ் மாணவர்கள், ஆய்வாளர்கள், வாசிப்பாளர்கள், படைப்பாளர்கள் மற்றும் புதிதாகத் தமிழ்இலக்கியம், இலக்கணம் கற்போர் உள்ளிட்ட பலருக்கும் பயன்படும் வகையில் தமிழ் இலக்கிய, இலக்கணக் கலைச்சொற்களை எளிய நடையில் விளக்கும் நோக்கத்துடன் இக்களஞ்சியத்தைப் புது தில்லியிலுள்ள சவகர்லால் நேரு பல்கலைக்கழகச் சிறப்புநிலைத் தமிழ்த் துறையின் பேராசிரியர் நா. சந்திரசேகரன் உருவாக்கிவருகிறார்.*

*இக்களஞ்சியத்தில் இலக்கியம் மற்றும் இலக்கணக் கோட்பாட்டுக் கருத்துகளைக் குறிக்கும் சொற்கள் பதிவுத் தலைப்புச் சொற்களாக இருக்கும். இலக்கிய வகைகள், திறனாய்வுக் கோட்பாடுகள், நவீனக் கண்டுபிடிப்புகள் சார்ந்து எழுந்த அறிவுச் சிந்தனைகளும் பதிவுத் தலைப்புச் சொற்களாக அமையும்.*

### *பதிவு அமைப்பு*

*தமிழில் தலைப்புச் சொல், அதன் உரோமன் எழுத்துப்பெயர்ப்பு ஆகியவற்றையடுத்து, எளிய ஆங்கிலத்தில் பொருள் விளக்கம் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டு, சற்று விரிவான விளக்கம் எளிய தமிழ் நடையில் அளிக்கப்படும்.*

*தலைச்சொல் தேர்வில் இதற்கு முன் வெளிவந்துள்ள கலை, இலக்கிய, இலக்கண, திறனாய்வியல் சொல்லராதிகள் மற்றும் கலைக்களஞ்சியங்களும் கருத்தில் கொள்ளப்படும். இலக்கிய, இலக்கண, திறனாய்வு சார் கலைச்சொற்கள் ஆங்கில ஒலிப்பிலேயே புழக்கத்தில் இருப்பின் அவற்றுக்கு நிகரான தமிழ்க் கலைச்சொற்கள் உருவாக்கப்படும்.*

### *மாதிரிப் பதிவுகள்*

**அறத்தொடுநிற்றல்** Aṟattoṭuniṟṟal (Confidente’s systematic ethical revelation of hero-heroine’s love)

**சங்க இலக்கியத்தில், குறிப்பாக, அகத்திணைப் பாடல்களில் அறத்தொடு நிற்றல் இடம்பெறுகிறது. தலைவன் தலைவியின் களவு ஒழுக்கம் பற்றித் தோழி முதலானோர் தலைவன், தலைவி, செவிலித் தாய், நற்றாய் என ஒவ்வொருவரிடமும் முறையாகப் பேசும் சூழல்கட்டமாகும். தலைமக்கள் காதலை அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுக்கு இவ்வாறு நாகரிகமாக வெளிப்படுத்துவதன்வழி, களவு ஒழுக்கத்தை (காதலை), முறையான கற்பு வாழ்க்கையாக (திருமணமாக) மாற்றும் ஏற்பாடாகும்.**

**இணைய(வழி)த் திறனாய்வு** Iṇaiyat tiṟaṉāyvu (Cybercriticism)

**இணையத் திறனாய்வு என்பது புதிய வரவு. ஆன்லைன் கலாச்சாரம், சைபர்ஸ்பேஸ் மற்றும் சைபர் செயல்பாடுகளின் விமர்சன பகுப்பாய்வு மற்றும் மதிப்பீட்டைக் குறிக்கிறது, இது பெரும்பாலும் தனி நபர்கள், சமூகம் மற்றும் பல்வேறு நிறுவனங்களில் அதன் தாக்கத்தை ஆராய்வதை உள்ளடக்கியது. இது சைபர் இலக்கியம் மற்றும் கலாச்சாரம் குறித்த கல்வி ஆராய்ச்சி முதல் சைபர் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் ஆன்லைன் தணிக்கை குறித்த பொது விவாதம் வரை பரந்த அளவிலான கண்ணோட்டங்களை உள்ளடக்கியது.**

# சொல் புதிது

தமிழ் ஊடகங்களில் அயல்மொழிச்சொற்கள் ஏராளமாகப் பயன்படுத்தப்படுவதைத் தவிர்க்க உதவவும், பிற துறை குறித்துத் தமிழில் எழுதுவோர்க்கு உதவவும், தமிழ் வளர்ச்சியின் பொருட்டும் **சொல் புதிது** எனும் திட்டத்தைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் 2025 மே முதல் செயற்படுத்திவருகிறது. ஒவ்வொரு மாதமும் கூடி, ஆங்கிலம் உள்ளிட்ட பிற மொழிச் சொற்களுக்கு நிகராக உருவாக்கிய தமிழ்ச் சொற்கள் தமிழ் வளர்ச்சிக் கழக வலைத்தளத்தில் வெளியிடப்படு கின்றன. ஊடகங்களுக்கும் அனுப்பிவைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூன்றாவது கூட்டம் 2025 சூலை 23இல் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின்வரும் 35 தமிழ்ச் சொற்கள் உருவாக்கப்பெற்றன:

1. Altcoin - இணைய மாற்றுக்காசு
2. Bitcoin - இணையக்காசு
3. Blockbuster - வணிக வெற்றி
4. Bouncer - மெய்க்காவலர்
5. Call sheet - படவேளை
6. Collegium - நெறியாயம்
7. Cryptocurrency - இணைய மறைநாணயம்
8. Ethereum - ஈத்தர் குறிக்காசு
9. Gate keeper - வாயில் காவலர் /வாயில் காப்பாளர்
10. Guaranty - பொறுப்புறுதி
11. Loco pilot - தொடரியோட்டி / இரயில் ஓட்டி
12. Litecoin - இணைய மென்காசு
13, Multi-level parking - அடுக்கு நிறுத்தகம்
14. Orange economy - ஆக்கநிலைப் பொருளாதாரம்
15. Poclain - பறிவண்டி
16. Poster - விளம்புகை
17. Postpaid - பின்பணம்/பின்செலுத்துகை
18. Premiere show - தனிக் காட்சி
19. Prepaid - முன்பணம் / முன்செலுத்துகை
20. Preview show - முன்னோக்குக் காட்சி
21. Promo song - விளம்புகைப் பாடல்
22. Recharge - மறுவூட்டம்
23. Restart - மறுதொடக்கம்
24. Road show - வீதியுலா
25. Rope car - வடவூர்தி
26. Saree drapist - சேலை அணியாளர்
27. Smart City - திறன் வளநகர்/சீர் நகர்
28. Smart meter - திறன் மானி
29. Smart parking - சீர் நிறுத்தகம்
30. Smart TV - திறன் தொலைக்காட்சி
31. Smart watch - திறன் கடிகாரம்
32. Sneak peek - தூண்டு காட்சி
33. Special show - சிறப்புக் காட்சி
34. Surgical strike - இலக்கழி தாக்குதல்
35. Warranty - காப்புறுதி

இவ்வாறு தமிழில் உருவாக்க வேண்டிய ஆங்கிலச் சொற்கள் வரவேற்கப்படுகின்றன. ஆர்வமுள்ளோர் தமிழ் வளர்ச்சிக் கழக மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.

## அஞ்சலி

### முனைவர் வே. வசந்திதேவி [1938–2025]



முனைவர் வே. வசந்திதேவி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் முன்னைத் துணைவேந்தர்; மாநில மகளிர் ஆணையத்தின் முன்னைத் தலைவர்; தமிழ்நாடு திட்டக் குழுவின் முன்னை உறுப்பினர்; **பள்ளிக்கல்விப் பாதுகாப்பு இயக்கத்தின் முன்னைத் தலைவர்;** பல்வேறு கல்வி மேம்பாட்டுத் திட்டங்கட்கும் மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கட்கும் காரணமாக இருந்தவர்; கல்வி உரிமைப் போராளி; **பெண்ணியவாதி; தொழிற்சங்கவாதி; சமூகச் செயற்பாட்டாளர்.**

அவர் மாரடைப்பால் 01.08.2025 வெள்ளியன்று மாலை 3.30 மணியளவில் இயற்கை எய்தினார். அவருக்கு வயது 87. **அவரது உடல் 02.08.2025 சனிக்கிழமை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரிக்குக் கொடையாக வழங்கப்பட்டது.**

அன்னாரது மறைவுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகம் அஞ்சலி செலுத்துகிறது.

# பாராட்டு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்
**முனைவர் சாரதா நம்பி ஆரூரன்** அவர்களுக்குச்
சென்னை கம்பன் கழகப் பொன்விழாவை ஒட்டி

**இயற்றமிழ் அறிஞர் விருது**

08.08.2025 அன்று அளித்துச் சிறப்பித்தார். தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் அறங்காவல் குழு உறுப்பினரான அவர் இவ்விருது பெற்றமைக்காக அவருக்கு மகிழ்ச்சியையும் பாராட்டையும் நல்வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறது தமிழ் வளர்ச்சிக் கழகம்.



சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் மொழித்துறைப் பேராசிரியரும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பொதுக்குழு உறுப்பினருமான **முனைவர் வாணி அறிவாளன்** அவர்களுக்குச் சென்னை கம்பன் கழகம் பேராசிரியர் இரா. இதாகிருஷ்ணன் நினைவுப் பரிசை 08.08.2025 அன்று அளித்துச் சிறப்பித்துள்ளது. அவருக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகம் மகிழ்ச்சியையும் பாராட்டையும் நல்வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

# நல்வாழ்த்து



தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்
வலைத்தளம், சொல் புதிது, உலகத் தமிழியல் நூற்களஞ்சியம்
உள்ளிட்ட பணிகளைக் கவனித்துவரும்
**'நீச்சல்காரன்' திரு இராசாராமன்**
கென்யாவின் நைரோபியில் 2025 ஆகஸ்ட் 6 முதல் 9 வரை நிகழ்ந்த விக்கிமேனியா என்கிற சர்வதேசக் கட்டற்ற அறிவுவள மாநாட்டில் தமிழ் விக்கிப்பீடியாவின் நிகராளராகக் கலந்துகொண்டார். அன்னாருக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகம் மகிழ்ச்சியையும் நல்வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறது.




## நூல் விற்பனை (50% கழிவுடன்)

தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள அனைத்து நூல்களும் 50% சிறப்புக் கழிவுடன் விற்பனை செய்யப்படுகின்றன.

தொடர்புக்கு:

**தமிழ் வளர்ச்சிக் கழகம்**
**மணிக்கூண்டுக் கட்டடம், சென்னைப் பல்கலைக்கழக வளாகம், சேப்பாக்கம், சென்னை 600 005**
**தொலைபேசி: 044-25365440 இணைய வலைத்தளம்: www.tamilvk.org**
**மின்னஞ்சல்: tamilvalarchikazhagam2024@gmail.com**